# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறாம் கட்டமாக ஆண்டிப்பட்டியில் பரப்புரையை தொடங்குகிறார்.



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **17.04.2026 (வெள்ளிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | ஆண்டிப்பட்டி - (பொதுக்கூட்டம்) | ஆண்டிப்பட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், கம்பம், |
| மாலை 7 மணி | திண்டுக்கல் - மணிக்கூண்டு (பொதுக்கூட்டம்) | திண்டுக்கல், பழனி, ஆத்தூர், நிலக்கோட்டை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நத்தம் |
| **18.04.2026 (சனிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | திருப்பூர் (பொதுக்கூட்டம்) | திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவினாசி, தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் |
| மாலை 7 மணி | மேட்டுப்பாளையம் (பொதுக்கூட்டம்) | மேட்டுப்பாளையம், உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் |
| **19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை)** | | |
| மாலை 4 மணி | ஒசூர் (பொதுக்கூட்டம்) | ஒசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி |

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 14.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை ஆதரித்து

## திருவெறும்பூரில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தேர்தல் பிரச்சாரம்!



திருச்சி, ஏப். 16 -

தமிழக சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ள நிலையில், தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை ஆதரித்து, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பொன்மலை மற்றும் மேலகல்கண்டார் கோட்டை பகுதிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பொதுமக்களிடையே அவர் பேசியதாவது:

புரட்சிகரமான திட்டங்கள் “கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத அளப்பரிய சாதனைகளைத் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு செய்து காட்டியுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம் (கட்டணமில்லா பேருந்து வசதி), முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற உன்னதமான திட்டங்கள் புரட்சிகர மான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணி கூட்டத்தில் பங்கேற்ற பல்வேறு மாநில முதல்வர்கள், தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் திட்டங்களைத் தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்த விரும்புவதாகப் பாராட்டியுள்ளனர். அந்த அளவிற்குத் திறமையான ஆட்சியை முதல்வர் நடத்தி வருகிறார்.”

**திராவிட இயக்கத்தைப் பாதுகாப்பதே இலக்கு!**

“திராவிட இயக்கத்தை வேரறுப்போம் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியபோதே, இந்த இயக்கத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. அதற்காகவே முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் கரம் கோர்த்தேன். திராவிட இயக்கத்திற்கு எந்தக் கேடும் நேராமல் காப்பதே எனது முதன்மையான கடமை.”

**மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்!**

“முல்லைப் பெரியாறு, நெய்வேலி நிலக்கரி நிறுவனம் மற்றும் ஸ்டெர்லைட் விவகாரங்களில் தமிழக நலனுக்காகப் போராடியவன் என்கிற உரிமையோடு உங்களிடம் கேட்கிறேன். மறைந்த மூத்த தலைவர் அன்பில் தர்மலிங்கத்தின் பேரனும், சிறந்த முறையில் பணியாற்றி வரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.”

பங்கேற்பாளர்கள்:

இந்த பிரச்சாரக் கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதிச் செயலாளர் தர்மராஜ், வட்டச் செயலாளர் முருகானந்தம், மாமன்ற உறுப்பினர் சீதாலட்சுமி முருகானந்தம், ம.தி.மு.க. தரப்பில் டாக்டர் ரொகையா மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

---

### பாசிச பா.ஜ.க.வின் நிழல் கூட தமிழ்நாடு மீது படியாமல்

## இந்த ஸ்டாலின் காப்பான்!

### வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஏப்.16 -

இந்திய விடுதலைக்கான முதல் புரட்சி வெடித்த வேலூர் மண், இன்றைய டெல்லி ஆதிக்கத்துக்கு எதிராகவும் தீர்ப்பெழுதும்!

தமிழர்களைச் சொந்த நாட்டில் இரண்டாம்தரக் குடிமக்களாக்க மறுவரையறையைக் கொண்டு வருகிறார்கள்.

இதனை எதிர்ப்பதால், தமிழர்களைப் படிப்பறிவற்றவர்கள் என்கிறார் “பா.ஜ.க. பண்பாளர்” பியுஷ் கோயல் அவர்கள். அவருக்கு நாவடக்கம் தேவை. இல்லையென்றால் தமிழ்நாடு இருமடங்காகத்தான் எதையும் திருப்பித் தரும்!

இப்படிப்பட்டவர்களுக்குச் செலுத்தும் ஒவ்வொரு வாக்கும் தமிழ்நாட்டை நூறாண்டு பின்னோக்கித் தள்ளுவதற்கான வாக்கு!

பாசிச பா.ஜ.க.வின் நிழல் கூட தமிழ்நாடு மீது படியாமல் இந்த ஸ்டாலின் காப்பான்!

**– வலைதளப் பதிவில்**
**முதல்வர் மு.க.ஸ்டாலின்**

---



அரியலூர் மாவட்ட தேர்தல் ஆலோசனைக் கூட்டம் அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் குன்னம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் கன்னிகை ஸ்டாலின் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.